பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 21 திங்கட்கிழமை 23.02.2026 | அதிர்வு 206

## உரைகள் இரத்தால் நாமல் அதிருப்தி!

பிரித்தானியாவின் புகழ்பெற்ற ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் திட்டமிடப்பட்டிருந்த தனது உரைகள் இரத்துச் செய்யப்பட்டமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# லண்டனில் நாமலுக்குப் பேரிடி! ஒக்ஸ்போர்ட் உரையும் இரத்து!!

### மாணவர் அமைப்புகளின் போராட்டங்களுக்குப் பணிந்தன பல்கலைக்கழகங்கள்

பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு மற்றுமொரு பின்னடைவாக, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த அவரது விசேட உரையும் அதிகாரபூர்வமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது. 02

# வவுனியாவில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!



## சட்டவிரோத மின்சாரக் கம்பியில் சிக்கிப் பலியா? ஈச்சங்குளம் பொலிஸார் தீவிர விசாரணை

(கி.வசந்தன்)

வவுனியா, பறங்கியாற்றுப் பகுதியில் 44 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் ஆற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பறங்கியாற்றுப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை வேளையில் பறங்கியாற்றுப் பகுதிக்குச் சென்ற மேற்படி நபர், நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதனால் அச்சமடைந்த குடும்பத்தினர் மற்றும் அயலவர்கள் இணைந்து தேடுதலில் ஈடுபட்டனர். இதன்போது, ஆற்றினுள் மேற்படி நபர் சடலமாகக் கிடப்பது கண்டறியப்பட்டது.

இந்த நபர் உயிரிழந்தமைக்கான காரணம் குறித்துப் பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். 02




# சவால்களைக் கண்டு அஞ்சும் தலைவர் நாமல் எம்.பி. அல்லர்

## தற்துணிவு இருப்பதால்தான் நாமல் லண்டன் சென்றார் என்று இந்திக அனுருத்த விளக்கம்

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. எந்நாளும் சவால்களைக் கண்டு அஞ்சும் ஒரு தலைவர் அல்லர்" என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

லண்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் நாமல் ராஜபக்ஷ நிகழ்த்தவிருந்த உரைகள் இரத்துச் செய்யப்பட்டமை குறித்து, கொழும்பில் இன்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து அவர் மேலும் கூறுகையில்:-

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் இவ்வாறான எதிர்ப்புகள் அன்று பலமாக இருந்தன. அத்தகைய எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அவர் தனது பயணங்களை வெற்றிகரமாக முன்னெடுத்தார். அதேபோன்றதொரு சூழல்தான் தற்போது நாமல் ராஜபக்ஷ வுக்கும் ஏற்பட்டுள்ளது. சர்வதேச ரீதியாக விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று, அங்குள்ளவர்களுடன் கலந்துரையாட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே அவர் லண்டனுக்குப் பயணமானார்.

நாமலின் உரைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறி இங்கே சிலர் மகிழ்ச்சியடையலாம். ஆனால், கடும் எதிர்ப்புகள் கிளம்பும் என்று தெரிந்தே லண்டனுக்குச் சென்ற அவரது தற்துணிவைப் பாராட்ட வேண்டும். அவர் எதற்கும் பின்வாங்கும் தலைவர் அல்லர். சவால்களை எதிர்கொள்ளும் பலம் அவரிடம் இருப்பதால்தான் அவர் இந்தப் பயணத்தைத் தொடங்கினார்.

தமிழ்ச் சமூகத்துடனும் மாணவர்களுடனும் திறந்த மனதுடன் விவாதித்து, உண்மை நிலையை விளக்கவே அவர் லண்டன் சென்றார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த வாய்ப்புத் தட்டிப் பறிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இத்தகைய தடைகள் நாமலின் அரசியல் பயணத்தையோ அல்லது கட்சியின் வீச்சையோ எவ்விதத்திலும் பாதிக்காது." - என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**உரைகள் இரத்தால்...**

நாமல் ராஜபக்ஷ தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளதாவது:-

"பல தலைமுறைகளாகச் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றங்களுக்கும், அறிவார்ந்த விவாதங்களுக்கும் பெயர் பெற்ற ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் ஒன்றியங்களில் உரையாற்ற நான் மிகுந்த ஆவலுடன் இருந்தேன். ஆனால், திட்டமிடப்பட்ட அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக அந்த நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளமை மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

பல்கலைக்கழகங்கள் என்பவை விவாதங்களின் மூலம் தீர்வுகளைக் காணும் இடங்களாக இருக்க வேண்டுமே தவிர, அச்சுறுத்தல்கள் மூலம் கருத்துக்களை மௌனிக்கச் செய்யும் இடங்களாக மாறக்கூடாது.

எனது கருத்துக்களைக் கடுமையாக எதிர்ப்பவர்களுடன் கூட நேரடி விவாதத்தில் ஈடுபடுவதை நான் எப்போதும் வரவேற்கின்றேன். ஏனெனில், மாற்றுக் கருத்துக்கள் மோதிக் கொள்ளும் போதே உண்மையான நல்லிணக்கமும் முன்னேற்றமும் ஏற்படும். விவாதங்களைத் தடுப்பது ஜனநாயகத்தைப் பலவீனப்படுத்தி, சமூகத்தில் பிரிவினையையே வளர்க்கும்." - என்று நாமல் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு அழைப்பு விடுத்த ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் ஒன்றியங்களுக்குத் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ள அவர், எதிர்காலத்தில் ஆரோக்கியமான ஒரு சூழலில் இத்தகைய விவாதங்கள் மீண்டும் அமையும் என்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

---

**லண்டனில்...**

ஏற்கனவே கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அவர் ஆற்றவிருந்த உரை இரத்துச் செய்யப்பட்ட நிலையில், தற்போது ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் தனது முடிவை அறிவித்துள்ளது.

இது குறித்து ஒக்ஸ்போர்ட் யூனியன் விடுத்துள்ள அறிக்கையில், "இந்த நிகழ்வில் பங்கேற்கவிருந்த மாணவர்கள் பலர் தங்களது பாதுகாப்பு மற்றும் சுதந்திரமாக கேள்விகளைக் கேட்கும் சூழல் குறித்து அச்சம் வெளியிட்டனர். ஒரு தரப்பினர் தங்களைப் பாதுகாப்பற்றதாக உணரும் ஒரு சூழலில் ஆரோக்கியமான விவாதத்தை முன்னெடுக்க முடியாது என்பதால் இந்த முடிவை எடுத்துள்ளோம்" என்று தெரிவித்துள்ளது.

லண்டனில் உள்ள தமிழ் மாணவர் அமைப்புகள், தமிழ் இளைஞர் அமைப்பு மற்றும் புலம்பெயர் அமைப்புகள் ஒன்றிணைந்து வழங்கிய கடும் அழுத்தம் மற்றும் திட்டமிடப்பட்டிருந்த பாரிய போராட்டங்கள் காரணமாகவே இந்த இரட்டைத் தடைகள் ஏற்பட்டுள்ளன.

உரைகள் இரத்துச் செய்யப்பட்ட போதிலும், நாமல் ராஜபக்ஷ மற்றும் அவருடன் சென்றுள்ள சாகர காரியவசம், மிலிந்த ராஜபக்ஷ ஆகியோர் லண்டனில் உள்ள ஏனைய மத வழிபாட்டு நிகழ்வுகள் மற்றும் உள்ளூர் சமூகத்துடனான சந்திப்புகளில் கலந்துகொண்டு வருகின்றனர்.

---

**வவுனியாவில் குடும்பஸ்தர்...**

குறிப்பாக, இப்பகுதிகளில் வன விலங்குகளை வேட்டையாடுவதற்காகச் சட்டவிரோதமாகப் பொருத்தப்படும் மின்சாரக் கம்பிகளில் சிக்கி இவர் உயிரிழந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சடலம் தற்போது வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மரணத்துக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிய உடற்கூற்றுப் பரிசோதனைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கிளிநொச்சியில் கையெழுத்துப் போராட்டம்

## புதிய சட்டமூலத்தையும் முறியடிக்க மக்கள் ஒன்றிணைவு; தமிழரசின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் பங்கேற்பு







இலங்கையில் தசாப்த காலங்களாக அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரியும், அதற்கு மாற்றீடாக அரசு கொண்டு வரத் திட்டமிட்டுள்ள “அரசைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்ட மூலத்துக்கு” எதிர்ப்புத் தெரிவித்தும் கிளிநொச்சியில் நேற்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், வர்த்தகர்கள் மற்றும் பெருமளவிலான பொதுமக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

இப்போராட்டத்தில் கலந்துகொண்டு தனது கையொப்பத்தைப் பதிவு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்,

“பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்கவும், இளைஞர்களைக் காரணமின்றி சிறையிலடைக்கவும் பயன்படுத்தப்பட்ட ஒரு கறுப்புச் சட்டமாகும். இப்போது அதற்குப் பதிலாக அதைவிட மோசமான “அரசைப் பாதுகாக்கும் சட்டம்“ என்ற பெயரில் புதிய அடக்குமுறைச் சட்டத்தை திணிக்க அரசு முயல்கின்றது. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.” – என்றார்.

இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில், வடக்கு – கிழக்கு மாகாணங்களில் ஜனநாயக ரீதியான போராட்டங்களை நசுக்க இச்சட்டங்கள் பயன்படுத்தப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

போராட்டத்தின் இறுதியில் சேகரிக்கப்பட்ட கையொப்பங்கள் அடங்கிய ஆவணங்கள், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் தூதரகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை தக்கவைக்க இலங்கை தீவிரம்

## பிரான்ஸ் முழு ஆதரவு வழங்குவதாக உறுதி என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தகவல்



இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு வலுவூட்டும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகையை மேலும் நீடித்துக் கொள்வதற்காக, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனிடம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேரடி ஆதரவைக் கோரியுள்ளார்.

இந்தியாவின் புதுடில்லியில் அண்மையில் நடைபெற்ற “செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டின்“ பக்க நிகழ்வாக இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற இருதரப்புப் பேச்சின் போதே இந்த முக்கிய கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தற்போது இலங்கைக்குக் கிடைத்து வரும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை 2026 டிசம்பர் மாதத்துடன் காலாவதியாகவுள்ளது. இந்தச் சலுகை இலங்கையின் ஆடைத் தொழில் மற்றும் இறப்பர் உற்பத்திகளுக்கு ஐரோப்பிய சந்தையில் பெரும் வாய்ப்புகளை வழங்கி வருகின்றது. இதனைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான விண்ணப்பத்தை இலங்கை சமர்ப்பிக்கவுள்ள நிலையில், அதற்குப் பிரான்ஸ் தனது முழுமையான ஆதரவை வழங்கும் என ஜனாதிபதி மக்ரோன் இதன்போது உறுதியளித்துள்ளார்.

இந்த இராஜதந்திர வெற்றி குறித்து ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்திய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்,

ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய நாடாக விளங்கும் பிரான்ஸின் ஆதரவு எமக்குக் கிடைத்துள்ளது. ஜனாதிபதி அநுரகுமாரவின் கோரிக்கையை ஏற்ற மக்ரோன், இலங்கையின் பொருளாதார மீட்சிக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்க இணங்கியுள்ளார். 2026க்கு பின்னரும் இந்த வரிச்சலுகையைப் பெறுவதற்குத் தேவையான சட்ட மற்றும் மனித உரிமை சார்ந்த பரிந்துரைகளை இலங்கை ஏற்கனவே நடைமுறைப்படுத்தி வருகின்றது.” – என்றார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைத் தக்கவைக்க, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் உள்ளிட்ட 27 சர்வதேச ஒப்பந்தங்களை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தி வருகின்றது. இந்நிலையில், பிரான்ஸ் போன்ற செல்வாக்குமிக்க நாடுகளின் ஆதரவு இலங்கைக்குப் பாரிய பலமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பொருளாதார மீட்சியில் கடந்த அரசின் பங்களிப்பை மறைக்கவே முடியாதாம்

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. சுட்டிக்காட்டு



“நாட்டின் பொருளாதார மீட்சியில் முன்னைய அரசின் பங்களிப்பும் உள்ளது. அதை எவரும் மறுதலிக்க முடியாது.” – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தார். அவர் வழங்கிய நேர்காணலில், பொருளாதார மீட்சி ஏற்படுவதற்கு தற்போதைய அரசு முன்னெடுத்த செயற்பாடுகளை வெகுவாகப் பாராட்டினார். எனினும், முன்னைய அரசின் பங்களிப்புத் தொடர்பில் எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, இலங்கையில் பொருளாதார மீட்சி ஏற்படுவதற்கு கடந்த அரசு வழங்கிய பங்களிப்பை அங்கீகரிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய வெற்றிகளுக்கான அடித்தளம் முன்னைய ஆட்சியிலேயே போடப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

“70 வீதமாக இருந்த நாட்டின் பணவீக்கம் மிக விரைவாக 2 வீதமாகக் குறைக்கப்பட்டது. மறை 7 வீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி 5 வீதமாக மாற்றப்பட்டது. இவையெல்லாம் குறைமதிப்புக்கு உட்படும் விடயமல்ல.” – என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தில் வழிபாடுகளுக்கு இராணுவத்தினர் தடை

## அரச தரப்பு முயன்றும் பயனில்லை



யாழ். மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு, இராணுவத்தால் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

மயிலிட்டி காணிக்கைமாதா ஆலயம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. அந்த ஆலயத்தில் வருடாந்தத் திருவிழாத் திருப்பலி கடந்த 2ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், இதற்கு அரசிடமும் இராணுவத்திடமும் அனுமதி கோரி மயிலிட்டி மீள்குடியேற்றச் சங்கத்தின் சார்பில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் உள்ளிட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட பகுதியைப் பார்வையிட்டதுடன், அங்கு வழிபாடுகளை நடத்த அனுமதிக்குமாறு இராணுவத்திடம் கோரிக்கை வைத்திருந்தனர். ஆனால், வழிபாடுகளை மேற்கொள்வதற்கு இராணுவத்தால் தடை விதிக்கப்பட்ட நிலையில், இந்த வருடத் திருவிழாத் திருப்பலி கைவிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கும், ஆளுநருக்கும், அமைச்சர் சந்திரசேகருக்கும், மாவட்டச் செயலருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் இராணுவத்தின் நடவடிக்கையில் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தில் திருவிழா வழிபாடுகளை மேற்கொள்வதற்கு யாழ். மறைமாவட்டமும் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன்போது, ஆலயத்துக்குள் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிக்க முடியாது என்றும், ஆலய வளாகத்துக்கு வெளியில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிப்பதாகவும் இராணுவத்தால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான முறையில் வழிபாட்டை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணம் ஆயர் இல்லம் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தின் இந்த வருடத் திருவிழா கைவிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி அரசிடம் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யாழில் கிருமித்தொற்றால் ஆசிரியை பரிதா மரணம்!

இளம் ஆசிரியை ஒருவர் கிருமித்தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், தையிட்டியைச் சேர்ந்த தே.துளக்சிகா ஜெசி (வயது-32) என்பவரே உயிரிழந்தவராவார்.

நீரிழிவால் பாதிக்கப்பட்டிருந்த இவர், அதற்குரிய சிகிச்சை பெறாதிருந்த நிலையில் கிருமித்தொற்றுக்கு இலக்காகியுள்ளார்.

கடந்த 20ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த இவர், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

# ஈழத்தின் வாழ்வியலைச் சுமந்து மார்ச் '13' திரைக்கு வரும் 'அந்தோனி'




(எஸ்.நிதர்ஷன்)

இசைஞானி இளையராஜாவின் இசையமைப்பில் தென்னிந்திய திரைப்படங்களுக்கு ஈடாக ஈழத்தின் வாழ்வியலைச் சுமந்து, ஈழக் கலைஞர்களின் கலைப்படைப்பாக உருவாக்கப்பட்டு திரையிடலுக்காக இருக்கும் "அந்தோனி" திரைப்படம் எதிர்வரும் மார்ச் 13 ஆம் திகதியன்று திரையிடப்படவுள்ளது என்று திரைப்படத்தின் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

'அந்தோனி' திரைப்படத்தின் திரையிடல் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் இன்று ஊடக சந்திப்பை முன்னெடுத்த போது இவ்வாறு தெரிவித்துள்ளது.

கூறிய குறித்த படத்தின் ஏற்பாட்டுக் குழு மேலும் கூதுகையில்,

ஓசை பிலிம்ஸ், கலைவளதி, விஜை பிலிம்ஸ் ஆகியவற்றின் பங்களிப்பில் உருவாக்கப்பட்டுள்ள அந்தோனி திரைப்படம் ஈழத்தின் முழுமையான படைப்பாக நீளத் திரைப்படமாக மிகப்பெரும் நிதிச்செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழகம், இலங்கை மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தமிழ் சிங்களம் மலையாளம் ஆகிய மொழிகளில் பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் இளையராஜாவின் இசை அமைப்பில் உருவாகியுள்ள ஈழத் திரைப்படத்தின் முதலாவது படைப்பாகும்.

இலங்கைத் தீவின் கடலோடிகளது வாழ்வியலை பிரதிபலிப்பாக, தமிழ், சிங்கள, மலையாள மக்களின் வாழ்வியல் கலாசாரத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லும் கருவை மையமாக கொண்ட திரைப்படம் இதுவாகும்.

அதன் அடிப்படையில் இந்த 'அந்தோனி' தனது இடத்தை தக்கவைத்துள்ளது.

ரசிகர்கள் அதற்கான அங்கீகாரத்தை வழங்கி முழுமையான திரைப் படைப்பாக வெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதே படக்குழுவின் எதிர்பார்ப்பாகும்.

இது வெறுமனே ஒரு திரைப்படம் அல்ல. இலங்கைத்தீவின் முழுமையான உழைப்பின் கலைப்படைப்பு என்பதை உணர்ந்து ரசிகர்கள் ஆதரவை வழங்குவார்கள் என்று நம்புவதாகவும் தெரிவித்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீளும் குற்றப் பத்திரம்

சில பொருள்கள் இலகுவில் தீப்பற்றக் கூடியவை. தீப்பற்றி எரிவதற்காகவே சில எரிபொருள்கள் இருக்கின்றன. எரிவாயுவும் நிலக்கரியும் அந்த வகையறாவைச் சேர்ந்தவை.

இலங்கையில் பெரும் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் பற்றிய பிரச்சினை இப்போது இந்த இரண்டு விடயங்களினதும் இறக்குமதியை ஒட்டிப் பற்றிப் பீடித்து எரியத் தொடங்கியுள்ளது.

ஊழலற்ற ஆட்சியை உருவாக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், நிலக்கரி மற்றும் எரிவாயு கொள்வனவு விவகாரங்களில் பாரிய மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட குற்றம் சாட்டியுள்ளார். அவர் கூறுகின்ற விடயங்கள் கவனத்துக்கு உரியவை.

நிலக்கரி கொள்வனவு தொடர்பில் குற்றச்சாட்டுகளைச் சமாளிக்க அரசாங்கம் முன்வைக்கும் 'விலை குறைப்பு' என்ற வாதம் மக்களை ஏமாற்றும் ஒரு தந்திரமாகும். உலக சந்தையில் நிலக்கரிக்கு எனப் பிரத்தியேக விலை சுட்டெண்கள் உண்டு. தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் விலை சுட்டெண்களை அடிப்படையாகக் கொண்டே கொள்முதல் விலைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் உலக சந்தையில் நிலக்கரி விலை உயர்ந்து காணப்பட்டது. ஆனால் தற்போது விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இச் சூழலில் பழைய விலையுடன் ஒப்பிட்டு தற்போது மலிவாக வாங்கியிருக்கின்றோம் என அரசு சமாளிப்புக் கூறுவது அபத்தமானது. குறிப்பாக, உயர் தரம் கொண்ட நிலக்கரிக்குப் பதிலாக குறைந்த தரம் கொண்ட நிலக்கரியையே அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது.

உலக சந்தையில் மெட்ரிக் தொன் ஒன்று 70 டொலர்களுக்குக் கிடைக்கக்கூடிய தரம் குறைந்த நிலக்கரியை, அரசாங்கம் 98.53 டொலர்களுக்கு வாங்கியுள்ளது. இதன் மூலம் ஒரு கப்பலுக்கு மாத்திரம் சுமார் 20 மில்லியன் டொலர்கள் வரை (620 கோடி ரூபா வரை) மேலதிக இலாபத்தை ஒரு தனியார் நிறுவனம் ஈட்டியுள்ளது. இதுவரை வந்துள்ள 8 கப்பல்கள் மூலம் நாட்டுக்கு சுமார் 240 மில்லியன் டொலர் வரை (சுமார் 7 ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபா வரை) நட்டம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் தனது பதவி விலகல் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ள முறைகேடுகள் குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அரிசி இறக்குமதியில் மோசடி செய்தன எனக் கணக்காய்வாளர் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட நிறுவனங்களுக்கே தற்போது நிலக்கரி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் சர்வதேச அளவில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள்.

எரிவாயு தட்டுப்பாடு குறித்த அமைச்சரின் விளக்கங்கள் முற்றிலும் முரணானவை. மக்கள் பீதியடைந்து எரிவாயுவைச் சேகரிப்பதாகக் கூறுவது வேடிக்கையானது. ஏனெனில் எரிவாயுவை சிலிண்டர்களில் மட்டுமே நிரப்ப முடியும்.

ஓமான் நிறுவனத்திடம் இருந்து எரிவாயு பெற்று வந்த லிட்ரோ நிறுவனம், தற்போதைய ஆட்சியின் கீழ் திடீரென விநியோகத் திறனற்ற ஓர் அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு விநியோக உரிமையை மாற்றியுள்ளது. இலங்கைக்கு மாதம் நான்கு கப்பல்கள் தேவைப்படும் நிலையில், இந்த நிறுவனத்திடம் இரண்டு கப்பல்கள் மட்டுமே உள்ளன. இத்தகைய திட்டமிடப்படாத தீர்மானங்களாலேயே இன்று நாட்டில் எரிவாயுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப்படி நீண்டு செல்கின்றது புபுது ஜயகொடவின் குற்றப் பத்திரம். ஊழல், முறைகேடுகளை எதிர்ப்போம் என்ற கோஷத்துடன் ஆட்சிப் பீடம் ஏறியோரின் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் மலைக்க வைக்கின்றன.

# சவூதி – இலங்கைக்கு இடையில் நிலவிவரும் வலுவான நட்பு அபிவிருத்திக்கு வாய்ப்பளிக்கும்

## சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு






**(அபு அலா)**

சவூதி அரேபியா மற்றும் இலங்கைக்கு இடையில் நிலவிவரும் வலுவான நட்புறவு எதிர்வரும் காலங்களில் நாட்டின் அபிவிருத்திக்கு புதிய வாய்ப்புகளை வழங்கும் என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சவூதி அரேபியாவின் ஸ்தாபகதின கொண்டாட்டமும், இப்தார் நிகழ்வும், இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரகத்தின் ஏற்பாட்டில் இராச்சியத்தின் தூதர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் கொழும்பில் அமைந்துள்ள ஐ.ரி.சி. ரத்னதீப ஹோட்டலில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இருநாடுகளுக்குமிடையில், அரசியல், சமூகம், பொருளாதாரம், கலாசாரம் மற்றும் சமய விழுமிங்கள் போன்ற துறைகளில் மிக நெருங்கிய தொடர்புகள் உள்ளன. அத்துறைகளின் வளர்ச்சிக்கு அவசியமான ஒத்துழைப்பையும் சவூதி அரேபியா வழங்கி வருகின்றன. சவூதி அரேபியாவில் பணிபுரியும், வசித்துவரும் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் இரு நாடுகளதும் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான உறவானது பரஸ்பர ஒத்துழைப்பு, விரிவான நிதி மற்றும் மனிதாபிமான உதவிகளுடன் கூடிய மிக ஆழமான பிணைப்பைக் கொண்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்கு பல்வேறு வகையான உதவிகளின் ஊடாக சவூதி அரேபியா முன்னின்று பங்களிப்பு செய்துள்ளது.

குறிப்பாக, சவூதி நிதியத்தின் ஊடாக நாட்டின் உட்கட்டமைப்பு மற்றும் கல்வித்துறையின் மேம்பாட்டுக்காக வழங்கப்பட்டு வரும் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளுக்கு இலங்கை மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

சவூதி அரேபியா பல்வேறு துறைகளில் முன்னெப்போதும் இல்லாத வகையிலான முன்னேற்றங்களை அடைந்து உலக அரங்கில் தனது இடத்தைப் பிடித்துள்ளது. உலகளாவிய ரீதியில் அனைவரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

தேசிய மற்றும் பிராந்திய முன்னேற்றத்துக்கான உருமாற்றத் திட்டமான 'விஷன் 2030' எனும் இலக்கை அடைவதற்காக அந்த நாடு ஓர் இலட்சியப் பாதையை வகுத்துள்ளது. அதற்கமைய, இலங்கையின் புதிய அரசின் 2030 ஆம் ஆண்டு வரையிலான தூரநோக்குத் திட்டத்தின்கீழ் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் பசுமை எரிசக்தி போன்ற துறைகளில் ஒத்துழைப்பதற்கான புதிய வாய்ப்புகள் சவூதி அரசு வழங்கும் என்ற நம்பிக்கையுள்ளது.

இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் ஒரு பொற்காலம் உதயமாகும் என்ற நம்பிக்கையுள்ளது. இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையில் பலமான உறவு தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து வருகிறது. இது பரஸ்பர முன்னேற்றத்தையும் நீடித்த நட்பையும் உறுதிப்படுத்தும்.– என்றார்.



# ஓட்டோவுக்காகக் கொலை 16 வயதுச் சிறுவன் கைது!

புத்தளம் பகுதியில் ஓட்டோ சாரதி ஒருவரை கொலை செய்து, அவரது ஓட்டோவைத் திருடிய சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் புத்தளம் பொலிஸ ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புத்தளம், ரத்மல்யாய பகுதியைச் சேர்ந்த 16 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம், அடப்பனவில்லுவ பகுதியில் உள்ள வடிகாலில் இருந்து சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று கிடைத்த தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணையில் இறந்தவர் அப்துல் லத்தீப் என்ற 75 வயதுடைய நபர் என்பது தெரியவந்துள்ளது, அவர் பெப்ரவரி 21 ஆம் திகதி தனது ஓட்டோவில் வாடகை பயணம் பெற வீட்டை விட்டு வெளியேறினார்.

பொலிஸ் விசாரணைகளின்படி, சந்தேக நபர் அன்று இரவு 9.30 மணியளவில் உயிரிழந்தவரின் வீட்டுக்கு வந்துள்ளார், அதன் பிறகு உயிரிழந்தவர் அவருக்கு வாடகைக்கு ஓட்டோ செலுத்தியுள்ளார்.

ஓட்டோவைத் திருடுவதற்காக சந்தேக நபர் கூர்மையான ஆயுதத்தைப் பயன்படுத்தி சாரதியின் கழுத்தில் தாக்கி கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் சடலத்தை கைவிட்டு, சந்தேக நபர் வாகனத்துடன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட ஓட்டோ பின்னர் புத்தளம் முல்லை வீட்டுவசதி வளாகத்தில் உள்ள ஒரு தேவாலயத்துக்கு அருகில் கைவிடப் பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

அதன்படி, பொலிஸார் வாகனத்தைப் பறிமுதல் செய்தனர். மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து, சந்தேக நபர் நேற்று அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும், பணத்தையும் ஓட்டோவையும் திருடும் நோக்கத்துடன் இந்தக் கொலையைச் செய்தார் என்று அவர் ஒப்புக்கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கற்பிட்டி பிரதான வீதியில் கோப்ரா மின் விளக்குகள்



**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

கற்பிட்டி பிரதான வீதியின் கோப்ரா மின்விளக்குகள் நீண்ட நாட்களாக பழுதடைந்து காணப்பட்டன. அதற்கான புதிய மின் விளக்குகள் கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக பிரதான வீதயின் பல்வேறு இடங்கள் இருளில் மூழ்கிக் காணப்பட்டன.

இது விடயமாக கற்பிட்டி பிரதேச சபையின் தவிசாளருக்கு சபையின் உறுப்பினர்கள் தொடராக விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இன்று திங்கட்கிழமை தவிசாளரின் மேற்பார்வையின் கீழ் உப தலைவர் உட்பட உறுப்பினர்களின் வழிக்காட்டலின் கற்பிட்டி பிரதான வீதியில் பழுதடைந்த சகல கோப்ரா மின்விளக்குகளும் மாற்றப்பட்டு புதிய கோப்ரா மின்விளக்குகள் பொருத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பண்டாரவன்னியன் நினைவாக சதுரங்க மற்றும் பேச்சுப் போட்டி








(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கும் அபிவிருத்திக்குமான நம்பிக்கை நிதியம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சதுரங்கச் சங்கம் என்பவற்றின் அனுசரணையுடன் பண்டாரவன்னியன் நினைவு சதுரங்க மற்றும் பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தார்.

மாணவர்களின் விவேக சிந்தனை, தன்னம்பிக்கை, தலைமைத் திறன் மற்றும் பொது மேடைப் பேச்சுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் 2025 ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் நடத்தப்பட்ட சதுரங்க மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

மாவட்டத்தின் கல்வி முன்னேற்றத்தையும், இளைஞர்களின் திறன் மேம்பாட்டையும் வலுப்படுத்தும் இந்த விழாவில் பண்டாரவன்னியனின் வீர வரலாற்றை நினைவுகூரும் வகையிலும், புதிய தலைமுறையினருக்கு தலைமைத்துவ விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையிலும் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பணப்பரிசு, வெற்றிக்கிண்ணம், பதக்கம் , வெற்றிச்சான்றிதழ் என்பன வழங்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் 4 தொடக்கம் 10 வரையான இடங்களைப் பெற்றவர்களுக்குப் பதக்கங்களும் வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அதன் பிரகாரம் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற கீழ்ப் பிரிவு மற்றும் மேற் பிரிவு மாணவர்கள் 35 பேரும் சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற 6, 8, 10, 12, 14 மற்றும் 19 வயதுக்கு கீழ் ஆகிய பிரிவு மாணவர்கள் 117 பேரும் பாராட்டுப் பெற்றிருந்தனர்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் பேராசிரியர் சிவராஜா ராஜ்உமேஷ் கலந்து கொண்டார். வவுனியா மாவட்ட செயலக பிரதம கணக்காளர் யேசு றெஜினோல்ட், மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் சற்குணேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், பொறியியலாளர்கள், சட்டத்தரணி, முல்லை அக்ரி லிமிட்டட் நிறுவனத்தின் பணிப்பாளர், முல்லை றொக் நிறுவனத்தின் பணிப்பாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட செயலக ஏனைய உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தென் மாகாண மலையக மக்களின் காணிப் பிரச்சினைகள் ஆராய்வு!

## ஜனாதிபதியிடம் மகஜர் கையளிக்க நடவடிக்கை





**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

தென் மாகாண மலையக மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு சனிக்கிழமை விசேட ஊடகச் சந்திப்பொன்றை நடத்தியது.

இந்த ஊடகச் சந்திப்பில் தோட்டப் பகுதிகளில் வாழும் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி சமூக தலைவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தனர். அவை அடங்கிய மகஜர் ஒன்றுக்கு கையெழுத்திட்ட அதேவேளை, இந்த மகஜரை ஜனாதிபதி செயலகத்துக்குக் கையளிப்பதற்கு முடிவு செய்தனர்.

மகஜரில் அடங்கியுள் கோரிக்கை களாக,

1. 1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 7 பர்ச்சஸ் காணி பெற்ற மலையக மக்களைப் பற்றிய துல்லியமான தகவல்கள் இல்லாததால், அவற்றை சேகரித்து புதுப்பிக்கும் நடவடிக்கைகளை பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு அவசரமாக அறிவுறுத்தல் வழங்குதல்.

2. வழங்கப்பட்ட காணிகளை மீள் மதிப்பீடு செய்து எல்லைகளைத் தெளிவாக குறியிட நடவடிக்கை எடுக்குதல்.

3. இந்த மக்களுக்கு காணி உறுதிப்பத்திரம் (ஒப்புதல் பத்திரம்) வழங்கி, சட்டபூர்வ உரிமையை உறுதி செய்தல்.

4. லைன் அறைகளில் வசிக்கும் மற்றும் எந்தவொரு காணி உரிமையும் இல்லாத குடும்பங்களுக்கு குறைந்தது 20 பர்ச்சஸ் காணி வழங்குதல்.

5. வழங்கப்பட்ட காணிகளை தோட்ட நிர்வாகத்திலிருந்து பிரித்து, அவற்றை உத்தியோகபூர்வ கிராமங்களாக அறிவிக்கும் நடவடிக்கை எடுத்தல் போன்றன உள்ளன.

மேற்கண்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஜனாதிபதியிடம் கையளித்து அதுகுறித்து கலந்துரையாடத் தயாராக இருப்பதாக அமைப்பு தெரிவித்தது.






# யாழ்ப்பாணம், வவுனியா இளைஞரை இணைத்து மாற்று நிகழ்ச்சித் திட்டம்

**(மரியசீலன் திலைக்ஸ்)**

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் முன்னெடுக்கப்பட்ட மாற்று நிகழ்ச்சி திட்டம் யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நாவலடி கிராமத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் இயக்குனர் அருட்பணி ஜீவரட்ணம் (அமதி) அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வளவாளராக ஆசிரியர் கனகரத்னம் கனகராஜா பங்குபற்றினார்.

இளைஞர் தலைமைத்துவத்தை பரவலாக்கமடையச் செய்யும் வகையில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களை இணைத்து ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்வில் பூம்புகார், நாவலடி இளைஞர் யுவதிகள் மற்றும் புளியங்குளம் லைக்கா குடியிருப்பு இளைஞர் யுவதிகள் பங்கு பற்றி பயனடைந்தனர்.

தொடர்ந்து இளையோர்களுக்கிடையே நற்புறவை ஏற்படுத்தும் வகையில் இளைஞர்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியும் யுவதிகளுக்கான வலைப் பந்தாட்ட போட்டியும் இடம்பெற்றன. வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கேடயங்களும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டன.







# மட்டக்களப்பு கோட்டமுனை பாடசாலையில் விமானப் படையால் கணினிக் கூடம் திறப்பு!






(ஜதுர்சயன்)

விமானப் படையினரால் மட்டக்களப்பு கோட்டமுனை கனிஷ்ட கல்லூரியில் புதிய கணணிக் கூடம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இலங்கை விமானப்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு கோட்டமுனை கனிஷ்ட கல்லூரியில் 20 லட்சம் ரூபா செலவில் புதிய கணணி கூடம் திறந்து வைத்து மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சால் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் கனிஷ்ட பாடசாலை மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்து முகமாக மாணவர் களுக்குக் கணினிகள் மற்றும் உபகர ணங்களை கொண்ட புதிய கணினிக் கூடம் இதன்போது கையளிக்கப்பட் டது.

இந்த நிகழ்வில் இலங்கை விமா னப்படையின் மின்னணுவியல் மற்றும் கணினி பொறியியல் பணிப்பாளர் நாயகம் ஏ.வி.எம்.ஹெட்டியாராச்சி பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய கணினிக் கூடத்தைத் திறந்து வைத்து மாணவர்களின் பாவனைக்காக கையளித்தார்.

மட்டக்களப்பு விமானப்படை முகாம் கட்டளை அதிகாரி குரூப் கெப்டன் ரன ரஜீவன தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு வலயக் கல்வி உயர் அதிகாரிகள், பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தையல் பயிற்சி நிலையம் திறந்து வைப்பு






(ஜதுர்சயன்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட எருவில் கிழக்கு கிராமத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று இன்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜீவ ஊற்று அன்பின் கரம் எனும் தன்னார்வ நிறுவனத்தினால் அந்தப் பகுதி யுவதிகளுக்கு இலவசமாக இந்த தையல் பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது.

ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் ஸ்தாபகர் ஜெஜீவனின் வழிநடத்தலின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் உருத்திரன் உதயஸ்ரீதர், ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் தலைவர் ஜோன் தயாழினி, தொழிலதிபர் பாக்கியராசா கமலநாதன், மதத் தலைவர்கள், அவ்வமைப்பின் தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தத் தையல் தொழில் பயிற்சி நிலையத்தில் அந்தப் பகுதியிலுள்ள யுவதிகளுக்கு, இலவசமாக பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்கள் எதிர்காலத்தில் சுய பொருளாதாரத்தில் முன்னேறக்கூடிய வகையில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித் தனர்.




# அனல் பறக்குமா?

## எதிர்பார்ப்புக்கு மத்தியில் சிம்பாப்வே-மே.இ.தீ. ஆட்டம்

10ஆவது ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு மும்பையில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் சிம்பாப்வே- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதவுள்ளன.

நடப்பு உலகக் கிண்ணத்தில் கணிப்புக்கு மாறாக சிம்பாப்வே அணி திடீரென விஸ்வரூபம் எடுத்தது. லீக் சுற்றில் ஓமன், ஆஸ்திரேலியா, இலங்கை ஆகிய அணிகளைத் தோற்கடித்தது. அயர்லாந்துக்கு எதிரான ஆட்டம் மழையால் ரத்தானது.

இதில் இலங்கைக்கு எதிராக 179 ஓட்டங்கள் இலக்கை விரட்டிப்பிடித்து அட்டகாசப்படுத்திய சிம்பாப்வே, தோல்வியே சந்திக்காமல் சுப்பர்-8 சுற்றுக்கு வந்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளும் அப்படித்தான். ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து, நேபாளம், இத்தாலி ஆகிய அணிகளைப் போட்டுத் தாக்கியது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ஷாய் ஹோப் (2 அரைச் சதங்கள் உள்பட 155 ஓட்டங்கள்), ரூதர்போர்ட், ஹெட்மயர் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

பந்து வீச்சில் ஹோல்டர், போர்டே, குடகேஷ் மோட்டி ஆகியோர் சிறப்பான நிலையில் உள்ளனர். எனினும் சிம்பாப்வே இப்போது அபாயகரமான அணியாக தெரிவதால், முன்னாள் சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள் மிகுந்த எச்சரிக்கையுடன் ஆடும் என்று நம்பலாம்.

# சென்னையின் பெரம்பூரில் விஜய் போட்டியிட வேண்டும்

## த.வெ.க. தீர்மானம்



எதிர்வரும் தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் சென்னையில் உள்ள பெரம்பூர் தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் போட்டியிட வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற அக்கட்சி நிர்வாகிகள் பங்கேற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

இதில் பேசிய த.வெ.க. தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச்செய லாளர் ஆதவ் அர்ஜுனா ,

“சென்னை - துறைமுகம் பகுதியில் நாம் அமைதியான முறையில் பிர சாரம் மேற்கொண்டோம். வீடு வீடாக அந்த பிரச்சாரப் பணி நடைபெற்றது. அப்போது நமது கர்ப்பிணி சகோதரி ஒருவரின் வயிற்றில் கை வைத்தார் கள். அப்போதே நம் தலைவர் முடிவு செய்து விட்டார், நாம் முதலில் இறங்க வேண்டியது வடசென்னை யில்தான் என்று.

வடசென்னை மீது ஒரு தவறான கண்ணோட்டத்தை தி.மு.க. உரு வாக்கி வைத்துள்ளது. இங்குள்ள மக்கள் அன்பானவர்கள். அனைவரும் உழைப்பாளிகள். அதை நாம் அறி வோம். இந்த நேரத்தில் ஒரு தீர்மா னம் நிறைவேற்ற வேண்டும் என கருதுகிறேன்.

வடசென்னையை வளர்ச்சி பாதைக்கு நம் தலைவர் அழைத்துச் செல்வார். வளர்ச்சியை மட்டுமே அவர் உருவாக்குவார். நிச்சயம் அவ ரது மனம் வடசென்னையை நோக் கிதான் உள்ளது என நான் கணிக் கிறேன்.

ஏனென்றால், வட சென்னையை இந்த 50 முதல் 60 ஆண்டுகளாக ‘ஒதுக்கி, ஒதுக்கி’ வைத்த தி.மு.கவின் சூழ்ச்சியை தூக்கி அடிக்கும் திறன் கொண்ட ஒரே தலைவர் நம் தலை வர்தான். சென்னை - பெரம்பூர் தொகு தியில் நம் தலைவர் போட்டியிட வேண்டும் என தீர்மானத்தை இந்த கூட்டத்தில் முன்மொழிகிறேன். இதை பொதுச்செயலாளர் வழிமொழிய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிக ளில் த.வெ.க. வேட்பாளராக யார் போட்டியிட்டாலும் சரி, அது நம் தலைவர்தான் என நாம் கருத வேண் டும். ஏனெனில், நம் தலைவரை முதல்வராக பொறுப்பேற்க செய்ய வேண்டும். சென்னையில் உள்ள அனைத்து தொகுதிகளையும் நாம் வெல்ல வேண்டும். சென்னை, தி. மு.கவின் கோட்டை என்று சொல்கி றார்கள். அதை நாம் உடைக்க வேண்டும்.” - என்றார்.

தொடர்ந்து ஆனந்த் பேசுகையில்,

“ஆதவ் முன்வைத்த தீர்மானத்தை நாங்கள் எல்லாரும் மனதார ஏற்றுக் கொள்கிறோம். உங்களுடைய விருப்பத்தை தளபதியிடம் சொல் வோம்.” - என்றார்.

# அ.தி.மு.கவை பா.ஜ.கவுக்கு விற்று விட்டார் பழனிசாமி

## கோவையில் உதயநிதி உரை



"பழனிசாமி 2019 இல் அ.தி.மு. கவை பா.ஜ.கவுக்கு அடகு வைத்தார். 2021 இல் அ.தி.மு.கவை பா.ஜ.கவுக்கு லீசுக்கு விட்டார். 2026 இல் அ.தி.மு. கவை பா.ஜ.கவுக்கு விற்று விட்டார்."

- இவ்வாறு கோவை மேற்கு மண் டல மாநாட்டில் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார் .

தி.மு.க. மேற்கு மண்டல இளைஞ ரணி மாநாடு, கோவை மாவட்டம் கருமத்தம்பட்டியை அடுத்த கணியூர் சுங்கச்சாவடி அருகே நேற்று மாலை நடைபெற்றது.

இம்மாநாட்டுக்கு தி.மு.க. இளைஞ ரணி செயலாளரும், துணை முதல் வருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை வகித்து உரையாற்றுகையில்,

“புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்து, தமிழகத்தில் இந்தி - சமஸ்கிருதத்தை நுழைக்கப் பார்க்கின்றனர். தேர்தல் வருவதால், பிரதமர் மோடி, அமைச்சர் அமித்ஷா ஆகியோர் தமிழகத்துக்கு அடிக்கடி வரத் தொடங்கியுள்ளனர். அவர்கள் வருவார்கள். ஆனால், எந்த நிதியும் வராது, எந்த திட்டமும் வராது. பிர தமர் மோடிக்கு முரட்டு அடிமையாக பழனிசாமி மாறியுள்ளார். எம்.ஜி.ஆர் இன்றைக்கு உயிரோடு இருந்தால், என் கட்சியை இப்படி ஆக்கிவிட்டாயே என பழனிசாமியை நினைத்து அழு திருப்பார்.

பழனிசாமி 2019 இல் அ.தி.மு.கவை பா.ஜ.கவுக்கு அடகு வைத்தார். 2021 இல் அ.தி.மு.கவை பா.ஜ.கவுக்கு லீசுக்கு விட்டார். 2026 இல் அ.தி.மு. கவை பா.ஜ.கவுக்கு விற்று விட்டார். தன் சுயநலத்தால் பழனிசாமி, அ.தி. மு.கவை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்கிறார். ஆனால், முதல்வர் ஸ்டா லின் தமிழ்நாட்டை அறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்கிறார். நாங்கள் ஈ.டிக்கும் பயப்பட மாட்டோம், மோடிக் கும் பயன்பட மாட்டோம். ஏன், மோடி யின் டாடிக்கும் பயப்பட மாட்டோம்.

ஜாடிக்கு ஏற்ற மூடி போல், மோடிக்கு ஏற்ற அடிமையாக பழனிசாமி உள் ளார். மக்களை தொந்தரவு செய்து, வெறுப்பை பரப்புவது பா.ஜ.கவின் நோக்கம். ஒவ்வொரு மாநிலத்திலும் வெறுப்பு அரசியலை பரப்புகின்றனர். முதல்வர் இருக்கும் வரை பா.ஜ.கவின் கலவர அரசியலை தமிழ்நாட்டுக்குள் நுழைய மக்கள் விடமாட்டார்கள். தற்போது நடக்க உள்ளது 8 கோடி மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் போராகும்.

தமிழகத்தை சீரழிக்க பாசிச, அடி மைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வருகின்றனர். அதை தடுக்கும் பொறுப்பு இளைஞரணிக்கு உள்ளது. இளைஞர ணியினர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று கழக கொள்கைகள், அரசின் திட்டங்களை எடுத்துக் கூறுங்கள். இந்த தேர்தல் தமிழ்நாட்டுக்கும், டில் லிக்கும் இடையே நடக்கும் ஜன நாயகப் போர். இந்த போரில், தமிழ் நாடு நிச்சயம் வென்று காட்டும்.” என்று தெரிவித்துள்ளார்.



# போதைப்பொருள் கடத்தல்கார கும்பலின் தலைவன் நெமேசியோ ஒசேகுரா கொலை

## மெக்சிகோவில் வன்முறை

மெக்சிகோவில் உள்ள ஜாலிஸ்கோ மாகாணத்தின் டபல்பா நகரில் போதைப்பொருள் கடத்தல் கும்பலை தடுக்கும் வகையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இருதரப்புக்கும் இடையே நடைபெற்ற தாக்குதலில் பிரபல போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவன் நெமேசியோ ஒசேகுரா கொல்லப்பட்டார். இதையடுத்து அங்கு அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் இறங்கினர்.

‘எல் மென்சோ’ என அறியப்படும் நெமேசியோ ஒசேகுரா, அந்நாட்டின் ஜாலிஸ்கோ மாகாணத்தில் சிஜேஎன்ஜி என்ற போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவனாக செயல்பட்டு வந்தார். 59 வயதான அவர், அமெரிக்கா மற்றும் மெக்சிகோ நாட்டில் தேடப்படும் குற்றவாளியாக இருந்தார். அவரை கைது செய்ய தகவல் கொடுப்பவர்களுக்கு 15 மில்லியன் டொலர்கள் வழங்கப்படும் என இரண்டு நாடுகளும் அறிவித்தன.

ஏனெனில், தனது கூட்டத்தின் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து தலைவர் பொறுப்புக்கு வந்த நெமேசியோ ஒசேகுரா, தனது குழுவின் செயல்பாடு மூலம் எதிரிகள் மற்றும் பாதுகாப்பு படையை கடுமையாக தாக்கி வந்தார். அந்த தாக்குதல் மிகவும் கொடூரமானதாக இருக்கும் என தகவல். அவர் சார்ந்துள்ள கும்பலை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்க நீதித்துறை அறிவித்துள்ளது. மெக்சிகோவில் இருந்து கொக்கைன், ஹெரோயின், மெத்தபெட்டமைன், ஃபெண்டானில் உள்ளிட்ட போதைப்பொருளை அமெரிக்காவுக்கு இவரது கும்பல் கடத்துகிறது.

முன்னதாக, மெக்சிகோ அரசு போதைப்பொருள் கடத்தலை தடுக்க வேண்டும் என ட்ரம்ப் தொடர்ந்து கூறி வந்தார். குறிப்பாக ஃபெண்டானில் போதைப்பொருள் கடத்தலை தடுக்க வேண்டும் என தெரிவித்தார். மேலும், மெக்சிகோவுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என்றும் அவர் அச்சுறுத்தினார். போதைப்பொருள் கும்பலின் செயல்பாட்டை தடுக்கும் செயலில் மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா தலைமையிலான அரசு மேற்கொள்ளவில்லை என அவர் கூறி வந்தார்.

இந்த சூழலில் இராணுவ நடவடிக்கையில் நெமேசியோ ஒசேகுரா கொல்லப்பட்டார் என மெக்சிகோ அறிவித்தது. இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் டபல்பாவில் போதைப்பொருள் கடத்தல் கும்பலின் நடமாட்டம் உள்ள பகுதியில் சோதனை நடந்தது.

அப்போது இருதரப்புக்கும் இடையில் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. இதில் பலத்த காயமடைந்த நெமேசியோ ஒசேகுரா உயிரிழந்தார். உயிருக்கு போராடிய அவரை வான் வழியாக மெக்சிகோ சிட்டிக்கு கொண்டு செல்ல முயன்ற போது அவர் மரணமடைந்தார் என பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

நெமேசியோ ஒசேகுரா கொல்லப்பட்ட செய்தியை அறிந்து அவரது ஆதரவாளர்கள் மெச்சிகோவில் வன்முறையில் இறங்கினர்.

பல்வேறு மாகாணங்களில் கார் உள்ளிட்ட வாகனங்களுக்கு தீ வைத்தனர். நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர இராணுவம் நடவடிக்கையில் இறங்கி உள்ளது. நெமேசியோ ஒசேகுரா கொல்லப்பட்டதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

மெக்சிகோவில் நிலவும் சூழலை கருத்தில் கொண்டு நிலைமை சீராகும் வரை அங்குள்ள இந்தியர்கள் யாரும் அவசியமின்றி வெளியில் செல்ல வேண்டாம் என இந்திய தூதரகம் அறிவுறுத்தி உள்ளது.








# ஆப்கானிஸ்தான் எல்லையில் பாக். வான்வழித் தாக்குதல்

## பெண்கள், குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் விமானப்படையினர் வான்வழித் தாக்குதல் நடத்தியதில் 18 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையேயான எல்லைப்புற மோதல்கள் கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருகின்றன. தலிபான்கள் தலைமையிலான ஆப்கானிஸ்தானின் நங்கர்ஹார் மற்றும் பாக்டிகா மாகாணங்களில் அடிக்கடி பாகிஸ்தான் விமானப்படை வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில் நேற்று திடீரென நங்கர்ஹார் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் வான்வழித் தாக்குதலை நடத்தினர். இந்த பயங்கரத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் 20 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இது குறித்து ஆப்கானிஸ்தான் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் கூறும்போது, “பாகிஸ்தான் இராணுவத்தினர் நங்கர்ஹார் மாகாணத்திலுள்ள பெஹ்சுத் மாவட்டத்தில் ஒரு வீட்டை குறிவைத்து நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 23 பேர் கட்டிட இடிபாடுகளுக்குள் புதைந்தனர். அவர்களில் இதுவரை 4 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர். மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.” - என்றார்.

தெஹ்ரிக்-இ தலிபான் பாகிஸ்தான் என்றழைக்கப்படும் தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், உளவுத்துறை தகவலின் அடிப்படையில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் பாகிஸ்தானைச் சேர்ந்த அமைச்சர் அத்தாவுல்லா தரார் தெரிவித்தார்.

இதேபோல், பாக்டிகா மாகாணத்தின் பெர்மல் மாவட்டம், நங்கர்ஹார் மாகாணத்தின் கோக்யானி மாவட்டத்தின் பல பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவத்தினர் பல முறை வான்வழித்தாக்குதல்களை நடத்தியுள்ளனர். கடந்த சனிக்கிழமை முதல் இங்கு தாக்குதல் நடைபெற்று வருவதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.









கனடா முரசு

திங்கட்கிழமை 23/02/2026

நாயின் சமர்த்தியத்தால் உயிர் பிழைத்த முதியவர்



02




# மெக்ஸிக்கோவிற்கான பயணம் குறித்து கனடா அரசு புதிய பயண எச்சரிக்கை

**மெக்ஸிக்கோவிற்கு பயணம் செய்யும் கனடியர்களுக்காக கனடா அரசு புதிய பயண எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.**

**குறிப்பாக ஜாலிஸ்கோ மாநிலத்தில் நிலவும் பாதுகாப்பு சூழ்நிலை காரணமாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

**ஜாலிஸ்கோ மாநிலத்தில் நிலைமை தீவிரமாகவும் வேகமாக மாறிக்கொண்டிருப்பதாக கனடாவின் வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.**

குறிப்பாக கவுடாலாஜாரா மற்றும் பியுட்ரோ வலார்டா பகுதிகளில் வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக கூறப்படுகிறது.

அந்த மாநிலத்தின் பல நகரங்களில் குற்றக் குழுக்கள் எரியும் வாகனங்களைப் பயன்படுத்தி வீதிகளை மறித்தன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

பியுட்ரோ வலார்டா நகரில் 'வீட்டிலேயே தங்கும் உத்தரவு அமல் படுத்தப்பட்டுள்ளது.

டாக்ஸி மற்றும் ரைடு - ஷேர் சேவைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. ஜாலிஸ்கோ மாநிலத்தில் உள்ள கனடியர்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு கனய வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும், ஊடகங்கள் மூலம் நிலைமையை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் மற்றும் அவசியமில்லாத பயணங்களை தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதிகாரப்பூர்வ தகவலின்படி, தற்போது 18,703 கனடியர்கள் மெக்ஸிக்கோவில் இருக்கின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.








# கனடாவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் நியூ பிரவுன்ஸ்விக் மாகாணத்தில் உள்ள செடியேக் பகுதியில் இடம்பெற்ற இரு வாகன மோதலில் 45 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் வெளியிட்ட அறிக்கையின்படி, பொலிஸ் அதிகாரி ஒருவர் Ohio Drive பகுதியில் அதிவேகமாக சென்றுகொண்டிருந்த ஒரு லொறியை கவனித்துள்ளார்.

வாகனத்தை நிறுத்த முயன்ற போது, அது வேகத்தை அதிகரித்து Route 133 கிழக்கு திசை நோக்கி திரும்பியதாக கூறப்படுகிறது. பின்னர் அதிகாரி பின்தொடர்வதை நிறுத்தியுள்ளார்.

இரவு 9.56 மணியளவில் Route 133 இல் இரு வாகனங்கள் மோதின என தகவல் கிடைத்துள்ளது.

சம்பவத்தில் ஈடுபட்ட லொறி, முன்பு அதிவேகமாக சென்றதாகக் கூறப்பட்ட அதே வாகனமாகும் என பொலிஸார் தெரிவித்தனர்.

லொறி ஓட்டுநர் மைய கோட்டை கடந்துச் சென்றதால் எதிரே வந்த காருடன் மோதியதாக நம்பப்படுகிறது. காரை ஓட்டிச் சென்ற 45 வயதுடைய நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அவர் வாகனத்தில் தனியாக இருந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. லொறியை ஓட்டிய 20 வயது இளைஞரும், அவரது நான்கு பயணிகளும் காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

லொறி ஓட்டுநர் “மரணத்தை ஏற்படுத்திய ஆபத்தான ஓட்டம்” மற்றும் “பொலிஸாரிடமிருந்து தப்பிச் செல்வது” என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராகும் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளார். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# நாயின் சமர்த்தியத்தால் உயிர் பிழைத்த முதியவர்

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள மனிடோயோலின் தீவுப் பகுதியில் 89 வயதுடைய முதியவர் ஒருவர் அயல்வீட்டு நாயின் சமர்த்தியத்தால் உயிர் தப்பிய சம்பவம் அனைவரையும் நெகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

மிக்கி மெக்கின்னி (வயது 89) பிப்ரவரி 3 ஆம் திகதி மாலை சுமார் 4.30 மணியளவில் தனது வீட்டின் வெளியில் இருந்த பனியை அகற்றும் இயந்திரத்தை நகர்த்தச் சென்றபோது தவறி விழுந்தார்.

கீழே விழுந்தபின் எழுந்து நிற்க பலமுறை முயன்றும் முடியவில்லை.“சில நேரத்திற்குப் பின்னர் நான் கவலைப்படத் தொடங்கினேன்,” என்று மெக்கின்னி தெரிவித்துள்ளார்.

அவரது பாக்கெட்டில் அவசர உதவி அழைப்புக் கருவி இருந்தும், அது இருப்பதை மறந்துவிட்டதாகவும் கூறினார். இறுதியில், உதவி எனக் கத்தத் தொடங்கினார்.

அவரது குரலை அடுத்த வீட்டு நாயான 'ரோசா' கேட்டு உடனே தனது எஜமானியான லிண்டா கில்கிரிஸ்டை எச்சரித்தது.

'நாய் வழக்கத்திற்கு மாறாக கதவுக்குச் சென்று குரைத்ததாகவும் வெளியே யாரும் இல்லாத நிலையில் அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. உடனே காலணிகளை அணிந்து வெளியே சென்றேன். வெளியே சென்றதும் உதவி கேட்கும் சத்தம் தெளிவாகக் கேட்டது என லிண்டா கூறினார்.



லிண்டாவும் மற்றொரு அயலவரும் சேர்ந்து மெக்கின்னியை எழுப்ப முயன்றும் முடியாததால், உடனடியாக நோயாளர் காவுவண்டி அழைக்கப்பட்டது.

30 ஆண்டுகளுக்கும் மேலாக பொலிஸ் அதிகாரியாக பணியாற்றிய மெக்கின்னி, “இந்த முறை நான் தான் பாதிக்கப்பட்டவன். ரோசா என் உயிரைக் காப்பாற்றியவள்,” என்று நன்றியுடன் தெரிவித்தார். அடுத்த நாள் ரோசாவுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பிஸ்கட் கொண்டு சென்றதாகவும் அவர் கூறினார்.



# ஒலிம்பிக் ஐஸ் ஹாக்கி இறுதிப் போட்டியை நேரில் பார்த்து ரசித்தார் கனடிய பிரதமர்

கனடிய பிரதமர் மார்க் கார்னி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தனது மனைவி டயானா ஃபாக்ஸ் கார்னியுடன் இணைந்து, கனடா - அமெரிக்கா இடையிலான ஆண்கள் ஒலிம்பிக் ஐஸ் ஹாக்கி இறுதிப் போட்டியை நேரில் பார்த்து ரசித்தார்.

ஒட்டாவாவின் வடபகுதியில் உள்ள கியூபெக்கின் செல்ஷா பப் உணவகத்தில் காலை 8 மணியளவில் அவர் குடும்பத்தினர், பிரதமர் அலுவலக ஊழியர்கள் மற்றும் லிபரல் கட்சி எம்.பிக்களுடன் சேர்ந்தார்.

ஜேர்சி அணிந்தும், வந்த பிரதமர், “எப்படி உணர்கிறோம்? சற்றே உற்சாகம் காட்டுங்கள்” என்று உள்ளே நுழைந்தபோது குரல் கொடுத்தார். போட்டி தொடங்கியபோது, கனடிய கோல் கீப்பர் ஜோர்டன் பினிங்டனை “Winnington” என சிரித்தபடி குறிப்பிட்டார்.

மிலான் - கோர்டினா ஒலிம்பிக் போட்டிகள் நேர்த்தியாக நடைபெறுவதை குறிப்பிட்டு, “இது இத்தாலி, எல்லாம் துல்லியமாக நடக்கிறது,” என்றும் அவர் கூறினார்.

கார்னி அணிந்திருந்த ஜேர்சி, இந்த ஆண்டின் தொடக்கத்தில் பெண்கள் தேசிய அணியால் வழங்கப்பட்டதாகும். அவரது மனைவி, கனடிய நட்சத்திர வீராங்கனை மரி-பிலிப் பூலின் எண் 29 ஜெர்சியை அணிந்திருந்தார்.



போட்டி கடுமையான முறையில் நடைபெற்றது. இரண்டாவது காலப் பகுதியின் இறுதியில் கேல் மகார் அடித்த கோல் மூலம் கனடா சம நிலை பெற்றது.

மூன்றாவது காலப்பகுதி முடிவில் கணக்கு 1-1 என இருந்ததால், போட்டி கூடுதல் நேரத்திற்குச் சென்றது. ஒரு கட்டத்தில் பரபரப்பான தருணத்தில் பிரதமர் இருக்கையிலிருந்து எழுந்து, கண்கள் திரையில் உறைந்தபடி பதட்டத்துடன் காத்திருந்தார்.

இரு அணிகளும் நீண்டகால போட்டி எதிரிகளாக விளங்குகின்றன. கடும் போராட்டத்திற்குப் பிறகு அமெரிக்க அணி வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றியது.

இதனால் கனடா அணிக்கும், அவர்களை உற்சாகப்படுத்திய பிரதமர் கார்னி குடும்பத்தினருக்கும் ஏமாற்றம் ஏற்பட்டது. கனடா 2002 மற்றும் 2010 ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்காவை வீழ்த்தி தங்கம் வென்றிருந்தது.

1980 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒலிம்பிக் தங்கத்தை வெல்ல அமெரிக்கா நீண்டகாலம் காத்திருந்த நிலையில், இம்முறை வெற்றியை தங்களுக்குச் சாதகமாக மாற்றியுள்ளது.

குடும்பத்துடன் இணைந்து தேசிய அணியை உற்சாகப்படுத்திய பிரதமர் கார்னி, போட்டி முடிந்த பின்னரும் வீரர்களின் முயற்சியை பாராட்டினார் என தெரிவிக்கப்பட்டது.

# கிழக்கு ஒன்டாரியோவில் பஸ் விபத்தில் 8 பேர் காயம்

கனடாவின் கிழக்கு ஒன்டாரியோவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 08 பேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

Highway 401 நெடுஞ்சாலையின் கிழக்கு நோக்கிய பாதையில், நபனீ நகரத்திற்கு கிழக்கில், கவுன்டி வீதி 4 மற்றும் கவுன்டி வீதி 6 இடையிலான பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சுமார் 50 பயணிகள் இருந்த ஒரு கோச் பஸ் நெடுஞ்சாலையில் ஓரமாக கவிழ்ந்ததாக தகவல் கிடைத்




ததாக ஒன்றாரியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுவரை உயிருக்கு ஆபத்தான காயங்கள் அல்லது உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை என அவர் கூறியுள்ளார்.

அவசர சேவையினர் சம்பவ இடத்தில் இருந்து அனைத்து பயணிகளுக்கும் உதவி வழங்கியுள்ளனர்.

சுமார் 08 பேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனவும் அவர்களின் காயங்களின் தீவிரம் பரிசோதிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேர்ந்த வேளையில் அந்தப் பகுதியில் வீதி வழுக்கலாக இருந்ததாக சமூக ஊடக பதிவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.